உ

சிவமயம்



# பேச்சியம்மன்

## அகவல்

## காவியம், தாலாட்டு, கும்மிப்பாடல்கள்

தொகுப்பும் ஆக்கமும்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம் தத்புருஷாய வித்மஹி
வச்சிர துண்டாண தீமஹி
தந்தோ தந்தி ப்ரசோதயாத்

# பேச்சியம்மன்

## அகவல்

## காவியம், தலாட்டு, கும்மிப்பாடல்கள்


தொகுப்பும்,ஆக்கமும்
**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**
சேனைக்குடியிருப்பு



05.05.2012
ஈஸ்வரி வெளியீடு-31


விலை 120/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

துர்கா காயத்ரி

ஓம் சிம்மத் வஜாயவித்மஹே
சூலஹஸ்தாய தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்

## பேச்சியம்மன் துதி

ஓம் சக்தி சித்தி யானந்த சத்தி
திரிலோக சக்தி பாதாள சத்தி
பரலோக சக்தி பரமே ஸ்பரியே
ஐயுங் கிலியும் அகோரப் பேச்சி
அரி ஓம் பகவதி ஓம்ஙார சத்தி
தேவர்கள் தேவி சேயிளை வணங்க
வருவாய் வருவாய் வரந்தருள் குமாரி
தருவாய் தருவாய் தற்பர நாயகி
தாம்போ டணிந்த தயவுள்ள மாதே
மெய்ப்பொரு ளாகிமே தினியில் வாவா
தற்பொரு ளாகத் தயவினில் வாவா
வங்ஙமா மலையில் வசித்திருப் பவளே
ஐயுங் கிலியும் அகிலாண்ட ரட்சகி
சவ்வுங் கிலியுஞ்சங்ஙார வல்லி
பவ்வுங் கிலியும் பாதாள யோகி
பரமேஸ் வரியே பத்திர காளி
ஆனந்த மாகி ஆடிய ரூபி
பள்ளயப் பேச்சி பழி காறிச்சி
ஏறடி வல்லி ஏகாந்த ரூபி
கன்னிக் குமரி காந்தா தாரி
கோலா காலங் கொண்டிருப்பவளே
கொச்ச மில்லாக் கொடி யிடையே
நம்பின பேர்க்கு நன்மைகள் செய்வாய்
பேய்களை யகற்றுவாய் பிணிகளை நீக்குவாய்
நான் செய் பூசையை நன்றா ஏற்பாய்
தாயே சரணம் தாளினை சரணம்
நமஸ்தே நமஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சியம்மன் அகவல் 01

ஓம் அரிஅரி காளி ஆனந்த காளி
ஆகாயப் பேச்சி அம்மையும் வாறாள்
பள்ளயப் பேச்சி பலியுண்ண வாறாள்
குத்து முலையுங் குளிர்ந்த மருங்கும்
பட்டு உடையும் பாம்பிலா பரணமுஞ்
செத்தா ரெலும்புஞ் சிவதா வடமும்
விரித்த சடையும் வெண்பிறைப் பல்லுங்
கடித்த பல்லில் காண்பது பிணமுஞ்
சுற்றியே பூதந் துணையாய் வரவே
காலிற் சிலம்பு கலீர்க் கலீரென
பாதச் சிலம்பு பளீர்ப் பளீரென
எடுத்த சூலம் இலங்கி வரவே
பம்பை துந்துமி படர்ந்து முழங்கச்
சுடலையிற் பூதஞ் சூழ்ந்து வரவே
குறும்பறை வயிரவர் கூட வரவே
எச்சிப் பசாசை எத்தியெடுத்துக்
கூட்டி வரவே கோழிகள் கூவ
உடுக்குத் தொனியை உத்தமி கேட்டுப்
பூசை முகத்திற்குப் போக வெழுந்து
கள்ளுக் குடிக்கக் கன்னி நினைந்து
பூதப் பசாசைக் பிடித்து விழுங்கி
எச்சிப் பசாசை எட்டத் துரத்திக்
கூவென்றாள் பேச்சி குலதே வதையாள்
வெள்ளிப் பிரம்புடன் வீரவாள் கையில்
வேப்பங் குழையும் விபூதியு மெடுத்துச்
சிவனை நினைந்தாள் தீட்சைமந் திரத்தால்
ஓமென்ற சொல்லை உச்சரிப் பாக
ஆமென்ற சொல்லை அம்மை நினைந்து
அறுகோண அச்சர ஆசனமிட்டுத்
தேவி யிருந்து சிவ பூசை செய்து
அள்ளி அமுதை அருந்த வெண்ணிப்
படைப்பி லிருக்கும் பலகார முண்டு
வாழைப்பழத்தை வாரி விழுங்கித்
கஞ்சா மதுவைக் கன்னி யருந்திக்
கள்ளுடன் சாராயம் கனவெறி யாகி
மண்டு மனைக்கு வாக்குக் கொடுத்துப்
போறா ளம்மன் புவனேசு பரியாள்
பள்ளயப் பேச்சி பாவாய் சரணம்
எங்களைக் காக்கு மீசுபரி சரணம்
சரணஞ் சரணந் தாயே சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சியம்மன் அகவல் 02

அரியோம் பகவதி துர்க்காம் பகவதி
சுந்தரி மாதங்கி துரந்தரி மகேஸ்பரி
ஒடுங்காத சக்தி உன்மத்த வயிரவி
சதுரங்க பாக்கியம் தந்தென்னை யாள்வாய்
கார ணகத்தி கார் நிற மேனிக்
கங்காளி தூளி வராகி வாமி
நவகோ ணத்தி நாரா யணத்தி
சிவகோ ணத்திற் சேர்ந்திருப் பவளே
இரத்த பாணி இரத்த பாணிச்சி
முறத்த பாணிச்சி மோகமா தங்கி
சண்டப் பிரசண்டி சாமுண்டி யகமுண்டி
துர்க்கை முண்டி வேதவே தாந்தி
காமகோ ணத்தி காமபா ணத்தி
சராசர நீலி மகிடசங் காரி
உச்சிட்ட காளி உதிரமா காளி
சுடலையி லாடுஞ் சோதிப்பிர காசி
ஆடும் பராபரி ஆகாச துர்க்கை
இந்திரன் திசையில் வாழ் ஈசனார் வேந்தே
ஆவென வெளிப்பாய் ஆனந்த வேந்தே
சாற்றும் வடதிசைச் சாமுண்டி வேந்தே
ஒருகையில் வாளும் உதித்த கேடயமும்
பருகிய சூலமும் பாசாங்குசமும்
இன்ப மளிக்கும் ஈயண்ட பாத்திரமும்
காதினில் தோடும் கருங்கனி வளையலும்
சிவனோடு நடனி சீக்கிரம் வருகவருக
என்னைப் பகைத்து எதிர்செய்யும் பேயை
உன்கை வாளால் உடலைப் பகிர்ந்து
பற்றி யெரிக்கும் பகவதியே வருகவருக
ஓம்ஆம் நடனத்தி ஓம்ஆம் வீரவீரி
அரி அரி சிவாய நம நமசிவாய நம.
சரணம் சரணம் நமஸ்தே

## பேச்சியம்மன் வாலை

ஓம்எரி எரி பவானி ஏகாந்த பவானி திரிபுர வராகி திருமாயன் சகோதரி சிவனை வணங்கியே தெய்வ கோட்டத்தில் ஓடிய உதிரத்தை உறுஞ்சிக் குடிப்பவளே தாழ் எரவம் பூண்ட பேச்சி ஓம் றிம் அங்அங் அகோரப் பேச்சி அம்மே வாவா என்முகத்திலும் நாவிலும் வந்தமர் தாயே வந்தமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்கா காயத்ரி

ஓம் கிரிஜாய வித்மஹே
சிவவ்வியாயை தீமஹி
தன்னோ துர்காப்ர சோதயாத்

## பேச்சியம்மன் காவியம்

துதி பெருகு மதுமாங்கி ஷத்தி திரிசூலி
துணைமேவு மபிராமி யகிலோக தேவி
மதிருப காரணி மாதங்கி ஓங்காரி
வடவாமு கத்திரு மாயன் சகோதரி
எதிராக வேவரு மணியுந் தளத்தி
இணையெருவ ரில்லாத பரிபூ ரணத்தி
அதிருப பரிகலத் தழகுபெறு பேச்சி
அம்மைதன் பாதமலர் தன்னை மற வேனே.

வளைவுற்ற கார்மொய்த்த விழிகுத்த மயிலாள்
வருதுட்டர் தனைவெட்டி எதிரிட்ட புகழாள்
மழையுற்ற குழலுற்ற தெனவெற்பு நிகராள்
வளர்துர்க்கை யெனவெப்ப நகருற்ற நிகராள்
களையொத்த முகிலொத்த பிணிவிட்டு அகலக்
கனமிக்க புகழ்சித்தி வரமுத்தி யருள்வாய்
தளர்வுற்ற உலகத்தில் அருள் சித்தி முத்தி
தருபேச்சி யம்மையே தயாபரப் பொருளே

அனவரத கலியாணி யதிருப நாரணி
அகிலமுழு தறமே வளர்த்தஅபி ராமி
மனமிகிழ்ந் தன்புதரு மாயி மகமாரி
மாதரி துரந்தரி மதனகெம் பீரி
கனகநற் கயிலைவளர் காவினோ தரியே
காளிதனை அன்பினொடு மாளுமா தாவே
எனது பகை வினைதீர வந்தஉமை யம்மையே
ஏகபர மேசுபரி பாதமலர் துணையே

இளமதலை யழுத தனைக்கண்டு தாயார்
இன்பமொடு பால்கொடுத் தேவளர்க் கிலையோ
அழகுள்ள பாலர் செய் குற்றமது போக்கி
அருள் தந்து என்றுமே ஆளநினை யம்மா
மழைசுற்று மேகநற் குழலழகு மாதே
மாயாபுர ரத்தியே வளர்கன்ன னூர்வாழ்
புளகத்தி லுயர்முத்து மாரியென வந்த
பூவையே பேச்சியென வாழுமா தாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லடி உப்போடை
# பேச்சியம்மன் காவியம்

1 சீருலவு மீழமெனு மட்டுமா நகரிற்
செப்பரிய வுப்போடை சேர்ந்தினிது வைகும்
பேருலவு பேச்சியெனு மாதரசி மீது
பெருமை செறி காவியமாலைபுனை ந்தணியக்
காருலவு மெயினருறை புனமீது நன்னிக்
கருதரிய பிரணவ வடிவ மாய் நின்ற
தாருலவு மைந்துகர வள்ளலிரு பாதந்
தஞ்சமென வடியேனின் நெஞ்சி லயரேனே

2 அயராது துதிசெய்யு மடியவர் தமக்கு
அவனியிடை வருதுயரமணுகாது நீக்கித்
தயவான வாலையா யனுதினமும் நின்று
சாற்றரிய அட்டமா சித்திகளு மீந்து
வயமுற்ற பாடலது பரிந்தினிது வைக
வரிசைசெறி யுப்போடை வாய்ந்த தலமென்று
பயமொன்று மில்லாத பேச்சியெனு மருவாய்ப்
பண்பான திருக்கோயில் பதிந்த மாதாவே.

3 மாதாவே நின்னுடைய புகழினிது பாட
மடயைனா மென்னாவில் வந்தினி தம ர்ந்து
பாதார விந்தமதைச் சிரமீது சூடிப்
பக்குவமாய நற்கிருபை பாலனெனக் கருளும்
ஆதாரமுனை யன்றி யாதொருவர் காணேன்
அஞ்சலிசெய் யடியவரை யனுதினமுங் காத்து
மீதான திருவுறையு முப்போடை மேவி வளர்
விள்ளரிய பேச்சியாய் விளங்குமென் தாயே

4 என்தாயே யேகனிடத் துறைந்ததுவும் நீயே
யீரேழு புவனமதாய் நின்றதுவு ம் நீயே
கன்மவினை நீக்கி நிதங் கார்ப்பதுவும் நீயே
கர்த்தனெதிர் நிர்த்தமது செய்ததுவும் நீயே
மன்னு புகழ் மாறனை முன் வதைத்ததுவும் நீயே
வஞ்சநெஞ்ச ராவணனை வென்றதும் நீயே
கன்னல் செறி உப்போடை கலந்தினி திருக்கும்
கருதரிய பேச்சியென வுறைந்த நாரணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 நாரணன் தங்கையென நின்றதுவும் நீயே
நான்முகன் நாவிலுறை சரஸ்வதியும் நீயே
ஆரணமு மாகமமு மானதுவும் நீயே,
அன்பத்தோ ரட்சரத் தாதியும் நீயே
சூரரண துர்க்கையா யுதித்ததுவும் நீயே
சொல்லரிய மகமாரி யானதுவும் நீயே
பூரண கலைஞானம் வளர்கின்ற வுப்போடை
பொருந்தி நிதம் வாழ்கின்ற பேச்சியென் தாயே.

6 தாயாகிச் சமரச மீன்றதுவும் நீயே
தரணிதனில் மானிடரா யுதித்ததுவும் நீயே
சேயர்களைக் காக்கவரு செல்வியுமை நீயே
செப்பரிய வமிர்தகலை யானதுவும் நீயே,
போயோடு சுடலைதனில் நடிப்பதுவும் நீயே
பிள்ளைகொலி மாடெனென வுறைவதுவும் நீயே
மாயனருள் பெறுகின்ற வுப்போடை மேவி நிதம்
வரமருளி யினி துவளர் பேச்சியெனுந் திருவே.

7 பேச்சியேனு ன்மகிமை யறியாது செய்தபிழை
பொறுத்தே தனுதினமுங் கிரங்கநினை யம்மா
காய்ச்சலொடு வெப்புமுதல் மற்றுமுள நோயாற்
கவலைகொண்டலைவதை நீ யறியாயோ தாயே
கூச்சமின்றி வந்துனது கிருபைமழை பெய்து
குழந்தைதுய ரகற்றமனங் குளிர்வதுவு மெப்போ
பேச்சு மூச் சறியாத பாலகனை நோக்கிப்
பேருலகில் வாழ்கவருள் பேச்சியென் தாயே.

8 அருளுதவு தாய்தந்தை யானதுவும் நீயே
அன்பரது துயரகற்றி யருள்வதுவும் நீயே
பெருமைசே ரிரவிமதி யானதுவும் நீயே
பேசரிய லெட்சுமியாய் நிற்பதுவும் நீயே
கருவாய் உயிர்க்குயிராய் கலந்ததுவும் நீயே
கயிலைமலை மீது நட மியற்றியதும் நீயே
அருவுருவ மில்லாத பேச்சி னுருவான
அழகுபெறு முப்போடை யமர்ந்த மாதாவே.

9 அமர்ந்துலவு திரிசூலி யாச்சி யபிராமி
ஐயனொடு பைரவி சாமுண்டி துர்க்கை
அமர்ந்தொழு மாதங்கி கங்காளி காளி
யன்புசெறி மீனாட்சி கன்னி மகமாரி
தமரகந் தனையேந்துஞ் சங்கரன் தேவி
சண்முக னிருபாலுஞ் சார்ந்த கெம்பீரி
தமராகவெந்நாளு மடியார் தமைக் காக்கும்
தாயான காமாட்சி பேச்சியென் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 என்னிதய மகலாத மூர்த்தி சிவமுத்தி
யேகாந்த வல்லியா யிருந்துதவு பத்தி
மன்னுபுக ழைந்தொழுத் தானபார சத்தி
மாமதுரை மாறனை முன் வதைத்த ரணசித்தி
உன்னரிய மகிடனை முன் வென்ற திரிசூலி
ஓங்காரப் பொருளாக வுறைந்த நவநீலி
பொன்னனைய மாதேயுன் பிள்ளைகளைக் காக்கப்
பூவிலுறையுப்போடை யுறைந்த வென் தாயே.

11 உறையான வகராட்சரமா யுதித்துதவும் நீயே
யோதரிய பிரதிருதி யானது வும் நீயே
நிறைவான பிராணனோ டபானனும் நீயே
நீங்காத வைம்பொறியாய் நிற்பதுவும் நீயே
மறைவான கருவிகர ணாதிகளும் நீயே
மாமறைக ளோராத வடிவுடையாள் நீயே
பிறையணியு மமலரரு உற்றதுவும் நீயே
பேசரிய வுப்போ டைப்பேச்சியென் தாயே.

12 என் தாயே மகேஸ்வரியே யிதுசமயம் வந்து
யெளியேனி ன்னிசைமாலை யேதமிலா தேற்று
அன்பர் தொழு முனதுதிருப் பாதமலர் சூடி
யக்கரவுந் தனையணியு மமலரரு கிருத்தித்
தன்னைநிகர் தானான தனியமிர்த மூட்டிச்
சாற்றரிய சூலயுச்ச பதவியதிற் சேர்த்து
உன்னுடைய நடனமதை யுலகறியக் காட்டு
மோங்கார திரிசூலி யுமைபேச்சி துணையே.

13 துணையாக உமையாளு மானைமுகன் வாழி
சுடர்வேல் பிடித்ததிரு முரு கோனும் வாழி
இணையொருவ ரில்லாத விறையேனும் வாழி
இமையவான் மகளோடு திருமாலும் வாழி
அணையாத கோபமுடை வயிரவனும் வாழி
ஆங்கார வீரனொடு செங்கோலும் வாழி
யிணையிலா வுப்போடை மாநரில் வாழும்
மெல்லியர் பேச்சியம்மையும் வாழ்க வாழியதே

சுபம்.

**பேச்சியம்மன் காவியம் முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம் பலம்

# பேச்சி அம்மன் கும்மிப்பாடல்

தரு

தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானனா
தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானானா

பாடல்

1 கற்பகக் கன்றே கஜமுகனே வையம்
கார்த்திடும் வேழ முகத்தோனே
அற்புதம் காட்டி அருள் தருவாய் பேச்சி
அம்மையின் மேற் கும்மி பாடுதற்கு

2 பாடுதற்கு இடர் வாராது காரும் வெள்ளைக்
கோடுடைக் குஞ்சரா தாழ் பணிந்தேன்
ஆடும் கலை மகள் நவில் நடம் புரி
அன்னை சரஸ்பதி தான் துணையே

3 தன் துணை கொண்டேன் திருமுகா வாரும்
செந்தியம் நற்பதி வாழ் குகனே
உன் துணையன்றியே ஒன்றறியேன் அப்பா
வந்தருள் வாலை முருகோனே

4 வாலைக்கு மேல் வாலையான வளாம் பேச்சி
மாறாத நம் குலத் தெய்வப் பெண்ணாம்
ஆலால முண்டோன் இடப்பாகம் பெற்ற
அன்னை சுடலயப் பேச்சியரே

5 பேச்சியம்மா எங்கள் மூச்சியம்மா நாங்கள்
பேசிடும் செந்தமிழ் தெய்வமம்மா
ஆச்சியம்மா உந்தன் ஆலயம் எய்தினால்
அன்புடன் காத்திடும் தெய்வமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 தெய்வமே உந்தனைத் தஞ்சமென்றோம் எங்கள்
எல்லையிலே குடி கொண்டவளே
பள்ளயக் காறி பழிகாறி எம்மைப்
பார்த் தருள் தாரும் அபிராமி

7 அபிராமி பைரவி துற்கை சாமுண்டியே
ஆத்தாளே சாம்பல் அணிந்தவளே
பைரவி நீலி பாரா சக்தி பேச்சியே
பார்த்தருள் தந்திட வா தாயே

8 தாயே நீ சாராயக் காறியம்மா பெரிய
சாடியில் கள்ளுக் குதமும் அம்மா
வா தாயே வந்து குடி தாயே இந்த
மக்களுக்கோர் வரம் தா தாயே

9 தாளங்கள் இங்கு முளங்குதம்மா சிறு
சல்லாரி ஓசைகள் கேட்குதம்மா
மேளங்கள் கொட்டும் உடுகின் ஓசை
விண்ணையும் முட்டுதே பாருமம்மா

10 பாருமம்மா இந்த ஏழை படும் துயர் இந்தப்
பாருலகை ஆளும் தாயாரே
ஆரும் துணையில்லை பேச்சி அம்மா உனை
அண்டினோம் ஆதரித்தருளுமம்மா

11 தாழ் எளுந்தாடும் சுடலையப் பேச்சி உன்
சன்னிதி கோயிலில்ப் பூசையம்மா
வாழைப்பழம் மொந்தன் றொட்டி பலகாரம்
வார்த்த தயிர்ப்பால் பொங்கலம்மா

12 பொங்கல் படையலும் சாம்பிறாணிப் புகை
பூக்களும் வாசனை வீசுதம்மா
எங்கு இருந்தாலும் அங்கெளுந்தாடிவா
என் குரு உன் மீது ஆணையம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 ஆனை தின்னிக் கஞ்சா வெறிமயக்கம் தேன்
அபினும் தள்ளாட வைக்குடி
கானக மீது குடியிருப்போ பேச்சி
காந்தாரி பொல்லாத கண்டாளி

14 சண்டாளக் காறியே முண்டகக்கண்ணியே
தாயே மகேஸ்வரி மாரிமுத்தே
உண்டென்ற பேர்க்கு உமையவளே தாயே
ஓங்காரி வீரம்மா காளியரே

15 காளிகா காந்தாரி காகுந்தன் தங்கையே
கன்னி மனோன் மணி வயிரவியே
சிங்கவாகினி திறி சூலி சக்தி
தேவி பகவதி கண்ணகையே

16 கண்ணை உருட்டி நீ காட்டாதே மகன்
கண்டு பயவானென்றெண்ணாதே
அன்னையே இம்மகன் உன்னைவிடுவேனோ
ஆத்தாளே சேர்த்தெனை த்தாளுமம்மா

17 ஆனந்தத் தாண்டவம் ஆடிவரத் தாயார்
ஆயென்று கூவிக்குதித்து வர
தானந்தத் தாளம் கால் போட்டு வர இங்கு
தாயாரின் கால் சிலம்போசையிட

18 ஓசையிடக் கை உலாவிவர தேவி
ஓங்காரி மஞ்சல் குளித்து வர
வாசனை பன்னீர் மணத்து வர மக்கள்
மாமலர் தூவி உனைப்போற்ற

19 போற்றினோம் பள்ளயப் பேச்சி அம்மா இந்த
பொல்லாத துட்டரை வெட்டெனம்மா
ஆற்றொண்ணாக் கண்ணிர் வடிக்குதம்மா பெண்கள்
ஆகாயப்பேச்சியே பாரேனம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 பாத்தால் பறந்திடும் பேய்கள் அம்மா வினை
பஞ்சாய் எரிந்திடும் நோய்களம்மா
காத்தணு காச்சலும் கண்ணோய் தலையிடி
கால் கை பிடிப்புடன் நெஞ்சு வலி

21 வலிகள் வாதைகள் வந்தணுகாது கார்
மாதாவே உன்னிரு தாழ் பணிந்தோம்
பொலி அருந்திடும் பேச்சியம்மா எம்மைப்
பின்னிரக்கம் கொண்டு கண்பாரும்

22 கண் காட்டி என்னை அனையாயோ இரு
கையினால் தூக்கியும் வையாயோ
உன் பாட்டதுக் கும்மிக் குறலங் காயோ மகன்
உருக்கிப்பாடுறேன் கேளாயோ

23 வாராயோ தாயாரே பேச்சியம்மா மூர்த்தி
பாடலில் நின்றருள் ஆச்சியம்மா
தாயாரே கும்மி கிரங்கேனம்மா பாடல்
மேதினி போற்றிட வையனம்மா

24 வையகம் போற்றி மறை போற்றி எங்கள்
மாதாவின் சந்நிதி மண் போற்றி
ஐயன் குமரன் ஆறுமுகன் சக்திகள்
ஆன பல கலை தாள் போற்றி

25 போற்றினேன் தாயே உன் பொன்னடிகள் மனம்
பொங்கிக் குளிர்ந்து பொறுத்தருள்வாய்
ஏற்றிப் பணிந்தேன் சரணமம்மா மாதா
என் தாய் சரணம் சரணமதே

**பேச்சியம்மன் கும்மி முற்றிற்று**

## வீரபத்திரன் வாலை

அரி ஓம் சிவனுடை திருக்கண்ணில்திருவேர்வை சிந்தி
அகோரமுகத்திற் பிறந்த அகோரவீரபத்திராயா வாவா
வாள் ஒரு கையும் வச்சிர தண்டு சூலம் ஒரு கையும்
சூழ் மளு ஏந்திய கையும் வளர்ந்தகாதும் வடிந்த மூக்கும்
கடித்த பல்லுமாக வாவா என்னாளும் நீ சிவனைக்
கண்டது போல் என் முகத்தில் நிற்க நிற்க வேகவாகா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மாரி காயத்ரி
ஓம் சிம்ம மத்வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்

**பேச்சியம்மன் பூசை விதி**




**அரிசியில் கீறும் அட்சரம் இது**

பந்தல் போட்டு வெள்ளை விரித்து அரிசி பரவி அட்சரம் கீறி 32 மடை வைத்து காத்தானுக்கு மது மாங்கிஷம் வைத்து நெய்வேத்தியம் பண்ண மந்திரம். ஓம் யோகி யோகி யோகா யோகி தேவாரணப் பேச்சி அம்மாமே வா வா உன் திருமனமிரங்கிவாஓம் ஆம் என்ற ஆதிப்பேச்சி ஆகாசப் பேச்சி வாவா வெற்றிக் குதிரை வெடிவாள் சுளற்ற பச்சக் குதிரை முன்னடக்க பவளக்குதிரை பின்னடக்க ஆதிபேச்சி அம்மே வாவா ஓம்றீம் ஐயும் கிலியும் சவ்வும் கிலியும் மாக நின்ற ஆதிசக்தி ஆகாசப்பேச்சி அம்மே வாவா வந்து நிற்க சுவாகா.

**பேச்சியம்மன் கும்பத்திற்கு
உருக்கொடுக்கும் மந்திரம்.**

ஓம் பேச்சி ஓங்காரப் பேச்சி வாவா அம்மா அம்மா ஏறுஏறு அம்மா ஏறு மிறியாய நம ஈஸ்பராயா நம ஓம் காளி உச்சாடு உச்சாடு சிவாய நம.

**சன்னத மேத்த**

ஓம் யுட்ட கண்ட அவுதாரயீசா யீசா அவுணவந்து போயாண்டநயினார் தேவநயினார் ராணைத் திரு வேறப்பா திருவேறு உருவேறப்பா உருவேறு

**பேச்சி அம்மனுக்கு மதுக்கொடுக்க**

ஓம் சூல மந்திர ரூப வேத காரணி சுடுசுடு எரிஎரிய வேசுவாகா திருநீறு போடப்பேசும்.

**தெய்வத்திரு நீறு போட**

ஓம் பேச்சி ஓங்காரப் பேச்சி மது மாங்கிச வாராகி வாங்கு வாங்கு ஏறு அம்மா ஏறு ஏறு சிவய நம உச்சாடு உச்சாடு நம சிவாய நம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சி உச்சாடனம்.

ஓம் யோகி யோகாசனத்தி சண்டாளி நிறு மாணி கொவுரி புத்திரி வராகி மாற்றானைப் பிளந்த சண்டாளி வல்லிடும் பேச்சி மண்டாடி வாடி மனதில் நினைக்க வாடி ஆதிவராகி அகிலாண்ட நாஷகி வம் முக்காதேவி மலையாள பகவதி வாரி சுருட்டி வாடி மகிடசங்காரி நில்லென்றால் நில்லு கட்டென்றால் கட்டு திருகு திருகு ஆடு ஆடு பேசி பேசி சிவ சத்தியானைப் பேசி சுவாகா

## பேச்சியம்மன் தாலாட்டு

வாற பவனி என்ன பள்ளயப் பேச்சி
நீ வந்திறங்கும் நேர்மைஎன்ன பள்ளயப் பேச்சி

எங்கே பாராமுகமோ பள்ளயப் பேச்சி
அம்மா எவ்விடத்தே சிந்தனையோ பள்ளயப் பேச்சி

சிந்தனை விட்டல்லவோ பள்ளயப் பேச்சி
அம்மா திரும்பிவர வேணுமம்மா பள்ளயப் பேச்சி

ஆயென்ற சத்தமுடன் பள்ளயப் பேச்சி
அம்மா அரண்டோடி வாதாயே பள்ளயப் பேச்சி

கூவென்ற சத்தமுடன் பள்ளயப் பேச்சி
அம்மா கொக்கரித்து வாதாயே பள்ளயப் பேச்சி

அலைவிசிறித் தலைகுலைந்து பள்ளயப் பேச்சி
அம்மா ஆடிவரவேணுமம்மா பள்ளயப் பேச்சி

ஓங்கார முக்கோணம் பள்ளயப் பேச்சி
அம்மா ஓம் நமசிவாயமென்று பள்ளயப் பேச்சி

நடலைசு டலையம்மா பள்ளயப் பேச்சி
அம்மா நடுச்சுடலை தில்லைவனம் பள்ளயப் பேச்சி

தில்லைவனத் தெல்லைவிட்டு பள்ளயப் பேச்சி
அம்மா திரும்பிவர வேணுமம்மா பள்ளயப் பேச்சி

பள்ளயக் காரியல்லோ பள்ளயப் பேச்சி
அம்மா பழிகாரி வாதாயே பள்ளயப் பேச்சி

பொல்லாத சண்டாளி பள்ளயப் பேச்சி
அம்மாபோர்க்களத்தில்வென்றசத்தி பள்ளயப் பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டைப் பொரியலம்மா பள்ளயப் பேச்சி
அம்மா முருங்கக்காய்த் தீயலம்மா பள்ளயப் பேச்சி

அட்டப்பு ழுங்கலம்மா பள்ளயப் பேச்சி
அம்மா ஆவாரம்பூ சுண்டலம்மா பள்ளயப் பேச்சி

சாராயக் காரியென்று பள்ளயப் பேச்சி
உனை தள்ளிவைத்தாள் மாரிமுத்து பள்ளயப் பேச்சி

குடிப்பாவாம் சாராயம் பள்ளயப் பேச்சி
அம்மா கொப்பளிப்பான் வெள்ளரக்கு பள்ளயப் பேச்சி

காஞ்சாக் குடிக்கிறதும் பள்ளயப் பேச்சி
அம்மா கண்ணிரண்டும் தூங்கிறதும் பள்ளயப் பேச்சி

ஆனைதின்னிக் கஞ்சாவாம் பள்ளயப் பேச்சி
அம்மா அமட்டுவெறி யாகுதடி பள்ளயப் பேச்சி

குதிரை தின்னிக் கஞ்சாவாம் பள்ளயப் பேச்சி
அம்மா குணத்தைக் கெடுக்கிறதும் பள்ளயப் பேச்சி

அபினும் மயக்குதடி பள்ளயப் பேச்சி
அம்மா அதிமயக்க மாகுதடி பள்ளயப் பேச்சி

கள்ளுக் குடிக்கிறதும் பள்ளயப் பேச்சி
அம்மா கனவெறிகள் கொள்ளுறதும் பள்ளயப் பேச்சி

கேட்டபெலி நான் தருவேன் பள்ளயப் பேச்சி
அம்மா கெறுவித மாய் வாதாயே பள்ளயப் பேச்சி

துள்ளுவெறிக் காறியல்லோ பள்ளயப் பேச்சி
அம்மா தூடர்ந்ரோதடி வாதாயே பள்ளயப் பேச்சி

காடோ குடியிருந்தாள் பள்ளயப் பேச்சி
அம்மா கானகமோ வீற்றிருந்தாள் பள்ளயப் பேச்சி

ஊரோ குடியிருந்தாள் பள்ளயப் பேச்சி
அம்மாஉளத்தொருவோ வீற்றிருந்தாள் பள்ளயப் பேச்சி

பொல்லாத சண்டாளி பள்ளயப் பேச்சி
அம்மா புதுமைத் துரைமகளாம் பள்ளயப் பேச்சி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வண்ணத்துரைமகளாம் பள்ளயப் பேச்சி
அம்மா வழக்காடி வென்ற சக்தி பள்ளயப் பேச்சி

மதுபொலி காரியல்லோ பள்ளயப் பேச்சி
அம்ம மன்றாட வாதாயே பள்ளயப் பேச்சி

சுடலையிலே போயிருந்து பள்ளயப் பேச்சி
அம்மா சொற்பனங்கள் கண்டேனென்று பள்ளயப் பேச்சி

பயித்திய காரியென்று பள்ளயப் பேச்சி
தாயார் பலபேரும் சொல்லுகினம் பள்ளயப் பேச்சி

வாளை யெடுத்தாவாம் பள்ளயப் பேச்சி
தாயார் வாளாலே மாய்க்கவென்று பள்ளயப் பேச்சி

பொல்லை யெடுத்தாவாம் பள்ளயப் பேச்சி
தாயார் போராட வேணுமென்று பள்ளயப் பேச்சி

கோடாலி தானெடுத்து பள்ளயப் பேச்சி
தாயார் கொள்ளி கொத்தப் போறானென்றாள் பள்ளயப் பேச்சி

வெள்ளிப் பிரம்பெடுத்து பள்ளயப் பேச்சி
தாயார் விசிவினை யாடிவர பள்ளயப் பேச்சி

பூசைக்குப் போகவென்று பள்ளயப் பேச்சி
தாயார் புறப்பட்டு வாறாவாம் பள்ளயப் பேச்சி

ஆருடை பூசையென்று பள்ளயப் பேச்சி
தாயார் அங்கே நின் றுலாவுவதும் பள்ளயப் பேச்சி

பூசை நல்ல பூசையம்மா பள்ளயப் பேச்சி
தாயார் பொரியுண்ணும் நேரமம்மா பள்ளயப் பேச்சி

இந்த நல்ல பூசையதை பள்ளயப் பேச்சி
தாயார் ஏற்றிடம்மா என்தாயே பள்ளயப் பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அம்மாளே வாறாவாம் வாறாவாம் சுடலயப் பேச்சி
தாயே மக்களுக்கு வரம் கொடுக்க பள்ளயப் பேச்சி

அம்மாளே தீராத நோய்ப்பிணிகள் சுடலயப் பேச்சி
தாயே தீர்த்துவிட வேணுமம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே மாறாத நோய்ப்பிணியை சுடலயப் பேச்சி
தாயே மாற்றிவிட வேணுமம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே வாக்கிட்டாற் பொய்யாது சுடலயப் பேச்சி
தாயே வரங்கொடுத்தாற் தப்பாது பள்ளயப் பேச்சி

அம்மாளே எச்சில் பாசிகளை சுடலயப் பேச்சி
தாயே எட்டத் துரத்தனம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே துட்டப் பாசிகளை சுடலயப் பேச்சி
தாயே துரத்திப் பிடியனம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே வாளொரு கை சூலமுமாம் சுடலயப் பேச்சி
தாயே வலது கையிற் சக்கரண்டி பள்ளயப் பேச்சி

அம்மாளே சக்கரங்கள் தானெடுத்து சுடலயப் பேச்சி
தாயே தவிடுபொடி யாக்கினாளாம் பள்ளயப் பேச்சி

அம்மாளே பூசை நல்ல பூசையிது சுடலயப் பேச்சி
தாயே தாயார் புனர் பூசை யாகுதம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே வந்துவந்து போவதொல்லாம் சுடலயப் பேச்சி
தாயே உங்கள் வங்கிசத்திற் கீனமுமாம் பள்ளயப் பேச்சி

அம்மாளே பூசை முடியனம்மா சுடலயப் பேச்சி
தாயே இந்தப் பொன்னான ஆலயத்தில் பள்ளயப் பேச்சி

அம்மாளே சமயத்தில் கையைவைத்து சுடலயப் பேச்சி
தாயே சதுராட வெணுமம்மா பள்ளயப் பேச்சி

தீர்தமெடுத்தாவாம் சுடலயப் பேச்சி
தாயார் தீவினையை மாற்றவென்று பள்ளயப் பேச்சி

அம்மாளே கடுகளவு நீறெடுத்துப் சுடலயப் பேச்சி
தாயார் காசளவு வட்டமிட்டாள் பள்ளயப் பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாளே மண்ணளவு நீறெடுத்து சுடலயப் பேச்சி
மலையளவு மந்திரிப்பாள் பள்ளயப் பேச்சி

அம்மாளே முப்பத்து முக்கோடி சுடலயப் பேச்சி
முகப்பணியும் தானணிவாளாம் பள்ளயப் பேச்சி

அம்மாளே கர்ப்பூர வாலாந்தி சுடலயப் பேச்சி
கன்னிமா ரேந்திவரப் பள்ளயப் பேச்சி

அம்மாளே மஞ்சள் மணக்கிறதும் சுடலயப் பேச்சி
நல்ல மணக்கோலங் கொள்ளுவதும் பள்ளயப் பேச்சி

அம்மாளே சாம்பிராணி வாடை யல்லோ சுடலயப் பேச்சி
தாயார் தனிவாடை வீசுதம்மா பள்ளயப் பேச்சி

சாமம்நல்ல சாமம்மா சுடலயப் பேச்சி
தாயார் சரிசாம வேளையிது பள்ளயப் பேச்சி

அம்மாளே வேளை நல்லவேளையல்லோ சுடலயப் பேச்சி
தாயார் விருந்துண்ணும் வேளையிது பள்ளயப் பேச்சி

அம்மாளே கும்பத்துக்குக் குள்ளே நின்று சுடலயப் பேச்சி
தாயே குதித்தோடி வாவனம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே கரகத்துக்குள்ளிருந்து சுடலயப் பேச்சி
தாயே காத்தருள வாவனம்மா பள்ளயப் பேச்சி

அம்மாளே பெலியருந்தும் வேளையிலே சுடலயப் பேச்சி
தாயார் பின்னிரக்கம் பாராவாம் பள்ளயப் பேச்சி

அம்மாளே மஞ்சல் கிணறுமுண்டு சுடலயப் பேச்சி
தாயார் மாமாங்கப் பெய்கையுண்டு பள்ளயப் பேச்சி

அம்மாளே இஞ்சிக் கிணறுமுண்டு சுடலயப் பேச்சி
தாயார்இலாமிச்சம் பெய்கையுண்டு பள்ளயப் பேச்சி

அம்மாளே சாட்டை மணிசிலம்பு சுடலயப் பேச்சி
இந்தச் சரிசாம வேளையிலே பள்ளயப் பேச்சி

அம்மாளே மாத்துடுத்துத் தலைமுழுகி சுடலயப் பேச்சி
தாயார் மது அருந்த வாறாவாம் பள்ளயப் பேச்சி

அம்மாளே சாய்ந் தாடிச்சாய்ந்தாடி சுடலயப் பேச்சி
தாயார் சதுராட வாதாயே பள்ளயப் பேச்சி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேறு

கோபமெழுப்பாதே என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் கொள்ளிதணலாகாதே

அம்மா அக்காளும் தங்காளும் என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் அஞ்சிரண்டு ஏழ்பேரும்

அம்மா ஏழ்பேர்க்கும் மூத்தவளாம் என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் ஏலகன்னி மாதுமையாம்

அம்மா பொல்லாத பத்தினியாம் என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் போர்க்களத்தில் நின்றவளாம்

அம்மா சத்தியொரு முகமாம் என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் சமயம் பதினாறாம்

அம்மா காந்தள் மலர் தானெடுத்து என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் கணபதியை பூசைசெய்தாய்

அம்மா செவ்வலரி தானெடுத்து என்தாயே பள்ளயப் பேச்சி
தயார் சிவனாரைப் பூசைசெய்தாய்

அம்மா அலர்ந்த மலர் தானெடுத்து என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் அரிராமரைப் பூசைசெய்தாய்

அம்மா வெள்ளை மலர் தானெடுத்து என்தாயே பள்ளயப் பேச்சி
தாயார் விநாயகரை பூசைசெய்தாய்

அம்மா குற்றம் பொறுத்திடம்மா என்தாயே பள்ளயப் பேச்சி
அம்மா கோடிகுற்றம் நீபொறம்மா

அம்மா எப்பிழைகள் செய்தாலும் என்தாயே பள்ளயப் பேச்சி
அம்மா ஈஸ்வரியே நீபொறம்மா

அம்மா சரணம் சரணம் அம்மா என்தாயே பள்ளயப் பேச்சி
அம்மா உன் தாழினையே சரணமம்மா

சுபம்.

## ஆ. க. வெட்டு

ஓம் திருப்பாற் கடலில் பிறந்த ஆதித்தன் மேலே வாழ்ந்த அக்கினி வதன னாணை எரியு மெரியும் வாது செல்லத் திருக்கண் சிவந்து திருக் கையில் சிலம்பும் ஆறுகையில் குழையும் இருதலையும் அக்கினி மூச்செறிந்து வா அவன் கடடிற்கு நில்லாதே ஆவேசு ஆவேசு அனுமனாணை ஆதிவிஸ்னுவானவணை பேசு பேசு வீசுவீசு அஞ்சனா தேவியாணை தெறி தெறி அறு அறு வேசுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறத்தியங் கிரிகாளி வெட்டு

ஓம் அடி அடிகாளி ஆங்காரக் காளி ஓடிவா காளி உத்தண்ட காளி சர்வ வயிரவி சத்துரு சங்காரி ஏறடி காளி என்னை எதிர்த்தவன் தலையை இருதுண்டாக்கு நெஞ்சைப்பிளந்து ஈரலை வாங்கு கண்ணைக் கிளி காதை அடை அஞ்செழுத்துப் பஞ்சாட்சரத்தானை என்முகம் கண்டவுடனே அடங்கித் தடையறத் தடையறு வேசுவாகா

### கிங்கிலியன் கட்டு

ஓம் படுபட்டு யோகிர்தா சர்வவியா தியும்
சர்வ சூனியங்களையும் ஆரைக் கிங்கிலியா.
அனாதி கிங்கிலியா. ஏக்கிய நெஞ்சைப் பிளந்து
இருள்வனத்தில் அனுமாரையும் வீரபத்திரரையும்
காளியையும் கருங்காளியையும் அட்டமாக்களையும்
அடரக்கட்டு. சீக்கிரம் கட்டு. ஐயனைக்கட்டு.
ஐயன் பிடாரியைக் கட்டு. ஆத்தாளைக்கட்டு.
கணபதியைக் கட்டு. அதன் கீழ் அடங்கிய
அஞ்சு பேய் கெஞ்சும் பேய் காலைப்பேய்
மாலைப்பேய்கனகன இருளன் மருளன் இவர்களைப்
பிடித்து செப்புக் குளத்தில் போடு போடு இஞ்ச
இரக்கம் பாராதே இலங்கை கிங்கிலியா கட்டு கட்டு
பூத கிங்கிலியா கட்டு பிரேத கிங்கிலியா கட்டு
கட்டு ஆகிர்த அகிர்த நாகிர்த அவ்வும் நவ்வும்
சிவாயநம கட்டு கட்டே சுவாகா.

### வீ. கா

ஓம் அரிஅரி வீர பத்திராயா அனாதிவீரபத்திராயா உத்தண்ட ஓங்காரா ஆதிசிவன் தலையில் அகோரத்தில் பிறந்த முகத்தோடுவாவா ஏனென்றும் பாராதே என்னை எதிர்த்த்வனை இருதுண்டாக்கிடு ஈரலைப்பிளந்து இருதுண்டாக்கிவிடு ஆதிசிவன் ஆணை அடங் கடங்கு சிவாகா

### கா வெட்டு

ஓம் மாய லோகி மந்திர லோகி வாவா வந்து நான் இட்ட பெலியை உண்டு எளுஎளு காடேறி ஆதிசிவன் பாதத்தில் அகலா திருப்பவளே அம்மே இவன் கட்டுக்கு இணங்காதே ஆதிசிவனாணை கட்டை அறுஅறு தெறிதெறி அம்மே நான் அழைக்கின்றேன் இந்தா லோகி அறுபடப்பட வேசுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

### ஆக்க தொகுப்பு நூல்களும்:-

| | |
|---|---|
| திருமுருகன் திருப்பாடற் திரட்டு ஆக்கம் | 210.00 |
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 310.00 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல்கள் | 150.00 |
| உகந்தைமலைக் குழந்தை முருகன் பாமாலை | 70.00 |
| **தொகுப்பு நூல்கள்:-** | |
| வைகுந்த மோட்சமாலை(ஆக்கமும் தொகுப்பும்) | 70.00 |
| கழுகுமலைப் பத்து | 100.00 |
| சிவ செந்திமாலை | 60.00 |
| ஆதிமூல கெருடப்பத்து | 80.00 |
| சிவமுத்து மணிமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 155.00 |
| சித்தர் ஞான வாலைக்கும்மி | 120.00 |
| வயிரவர் காவியப்பாடல்கள் | 70.00 |
| சனி பகவான் துதி தோத்திரப் பாடல்கள் | 70.00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 100.00 |
| சிவமுத்துமாரியம்மன் குளுர்த்திப்பாடல்கள் | 135.00 |
| காளியம்மன் காவியகும்மிப்பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 145.00 |
| திருகோயில் சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பாமாலை | 60.00 |
| மண்டூர் முருகன் பவளமணி மாலை | 75.00 |
| வெருகல் பதிவுறை வேலவர் போற்றிப் பாமாலை | 75.00 |
| நாகம்மை புகழ் மாலை | 120.00 |
| பேச்சியம்மன் காவியம், தாலாட்டு, கும்மிப்பாடல்கள் | 120.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கிழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B
077-6538667

விக்டரி அச்சகம் கல்முனை 0770643990

விலை: 120/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org